முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் - 25/2017

**வாதி தரப்பு சாட்சி-1 தனலெட்சுமி - திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க்** அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 11.06.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை:**

1) யார் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் நல்லம்பெருமாள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நல்லம்பெருமாள் தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான். நல்லம்பெருமாள், இளைய ராணி குடும்பத்திற்கும், எனது குடும்பத்திற்கும் ஏதேனும் சம்பந்தம் உள்ளதா என்றால் இல்லை. எனது கணவர் பெயர் சுப்பிரமணி. சுப்பிரமணியின் தகப்பனார் பெயர் லட்சப்பஉடையார். லட்சப்ப உடையார் உயிருடன் இல்லை. லட்சப்ப உடையாரின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ் வைத்திருககிறேனா என்றால் வைத்திருக்கிறேன். தாவா சொத்து குடியிருப்பு நத்தம் என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண் 1420. தாவா சொத்திற்கு மேற்கே நல்லபெருமாள் நிலம் உள்ளதா என்றால் இல்லை, ராமசாமி நிலம் உள்ளது. நல்லம்பெருமாளும், ராமசாமியும் உடன்பிறந்தவர்கள் என்றால் சரிதான்.

2) தாவா சொத்து எவ்வளவு விஸ்தீரணம் என்றால் 1 ஏர்ஸ் ஆகும். தாவா சொத்தின் சர்வே எண்ணில் எவ்வளவு மொத்த விஸ்தீரணம் உள்ளது என்றால் தெரியவில்லை. நான் எனது சாட்சிய வாக்குமூலத்தில் எனது கணவர் தாவா சொத்தை வாய் மொழி தான செட்டில்மென்டாக கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் இல்லை, பூர்வீகமாக எனது மாமனார் காலத்தில் இருந்து அனுபவித்து வருவதாகத்தான் சொல்லியுள்ளேன். எனது மாமனார் பெயரில் பட்டா ஏதேனும் இருந்ததா என்றால் இல்லை. எனது கணவர் பெயரில் பட்டா இருந்ததா என்றால் இல்லை. முத்தப்ப உடையார் யார் என்றால் எனது மாமனார் லட்சப்ப உடையாரின் தகப்பனார். முத்தப்ப உடையார் பெயரில் ஏதேனும் ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. எனது மாமனார் லட்சப்ப உடையார் தாவா சொத்தின் சுவாதீனத்தில் இருந்ததை காட்ட ஏதேனும் ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. எனது கணவர்

தாவா சொத்தில் சுவாதீனத்தில் இருந்தார் என்பதை காட்ட ஏதேனும் ஆவணம் உள்ளதா என்றால் இல்லை.

3) நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 பட்டா 2011 ம் வருடத்தினுடையது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 பட்டாவில் சர்வே எண் அடித்து எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அடித்து எழுதப்பட்ட எழுத்துக்களின் மை வேறு என்றும், மற்ற வாசகங்கள் எழுதப்பட்ட மை வேறு என்றாலும் சரிதான். நான் பட்டா பெறுவதற்கு மனு கொடுத்தேனா என்றால் 2011 ம் வருடம் கொடுத்தேன். அந்த மனு நகல் வைத்திருக்கிறேனா என்றால் வைத்திருக்கிறேன். மனு கொடுத்த பின்னிட்டு விசாரணை செய்தார்களா என்றால், கிராம நிர்வாக அலுவலர் வந்து விசாரித்தார். அதற்கு முன்பு வட்டாட்சியர் வந்ததாக சொன்னார்கள். அப்போது நான் இல்லை. தாவா சொத்தை அளந்து அத்துக் காட்டினார்களா என்றால் ஞாபகமில்லை. நான் மேற்படி பட்டாவை யாரிடம் இருந்து பெற்றேன் என்றால், கிராம நிர்வாக அலுவலரிடம் இருந்து பெற்றேன்.

4) வா.சா.ஆ.1 பட்டா காலி மனைக்கு உரியது என்றால் சரிதான். நான் தற்போது அதில் வீடு கட்டியுள்ளேனா என்றால், வீடு கட்டவில்லை, செட் அமைத்து அதில்தான் சமைத்து சாப்பிட்டு வருகிறேன். நான் அமைத்த செட்டிற்கு கதவு எண் உள்ளதா என்றால் இல்லை. மேற்படி செட்டிற்கு வீட்டு வரி செலுத்துகிறேனா என்றால் இல்லை. நான் சென்று கேட்டேன், கட்டிடம் போட்டால்தான் கொடுப்போம் என்று சொல்லிவிட்டார்கள். வா.சா.ஆ.1 ஐ படித்து பார்த்தேனா என்றால் எனக்கு படிக்க தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் ஒரு வருட காத்திற்குள் கட்டிடம் கட்ட வேண்டும் என்று நிபந்தனை உள்ளதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள பதிலுரையை படித்து பார்த்தேனா என்றால் இல்லை. என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், தாவா சொத்து எங்களுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது. அந்த இடம் வேண்டும் என்று கேட்டுள்ளேன். 2 ம் பிரதிவாதி தாவா சொத்திற்கு பத்திரம் வைத்துள்ளார்களா என்றால் வைத்துள்ளார். 2 ம் பிரதிவாதிக்கு அவரது தகப்பனார் தாவா சொத்தை தான செட்டில்மென்ட் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

5) எப்போது செய்து கொடுத்தார் என்றால் 2016 ம் வருடம் செய்து கொடுத்தார். அந்த தான செட்டில்மென்ட் ஆவணம் வா.சா.ஆ.2 என்றால் சரிதான். வா.சா.ஆ.2

ஆவணத்தில் பின் இணைப்பாக உள்ள பட்டாவில் நல்லம்பெருமாள் பெயர் உள்ளது என்றால், அவர் போலியாக வாங்கியுள்ளார். ஆவணத்திற்கு பின்னிட்டு பட்டா 2 ம் பிரதிவாதி பெயரில் மாறிவிட்டதா என்றால் இல்லை. இதே வழக்கு சொத்தை பொறுத்து, இதே நீதி மன்றத்தில் அ.வ.எ.242/16 வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நல்லம்பெருமாளுக்கு சொத்து எவ்வாறு பாத்தியம் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தை பொறுத்து 28.11.1958 ம் தேதியில் நல்லம்பெருமாள் கிரையமாக பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி கிரைய ஆவணத்தில் அடிப்படையில் நல்லம்பெருமாள் தன் மகள் இளையராணிக்கு தான செட்டில்மென்ட் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி

**Principal District Munsif,**

**Kulithalai.**